1984 பிப்ரவரி 18]

(அ) 1983 மார்ச்சில் மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சரை மாநில மின்துறை அமைச்சர் சந்தித்து தமிழ்நாடு அரசு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு மூன்று கப்பல்கள் வாங்கும் விஷயமாகப் பேச்சுவார்த்தை நடத்தியது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) மிகவும் சிக்கனமான முறையில் நிலக்கரியை ஹால்டியாவிலிருந்து தூத்துக்குடி அனல்மின் நிலையத்திற்கு எடுத்துச் செல்ல பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட மூன்று கப்பல்களை பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் வாங்குவதற்கான ஏற்பாடு செய்தது. இது சம்பந்தமாக மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெறுவதற்காக அன்றைய போக்குவரத்து அமைச்சரோடு நேரடியாகப் பேசப்பட்டது.

(முற்பகல் 9—30)

69 (*வினா எண் 21371)—திரு. என். பழனிவேல் மற்றும் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசுக்கு வெளிநாடுகளிலிருந்து கப்பல்கள் வாங்க மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அனுமதி வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஒரு புதிய கப்பல் ஜப்பானிலிருந்து வாங்க, மத்திய அரசு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கியுள்ளது.

(ஆ) இப்போது பேசி நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்தக் கப்பல் கட்டுவதற்கான ஆர்டர் கப்பல் தளத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மத்திய அமைச்சரைச் சந்தித்துப் பேசியதாகச் சொன்னார்கள். ஏற்கனவே பத்திரிகைகளில் ஒரு கப்பல் வாங்குவதற்காக அனுமதி அளித்ததாக செய்திகளை நாங்கள் பார்த்தோம். இப்போது மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது எவ்வளவு கப்பல்கள் வாங்குவதற்காக ? எந்த நாட்டிலிருந்து ? ஒரு கப்பலின் கிரயம் எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒரு கப்பலை வாங்குவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. ஜப்பானிலிருந்து வாங்கிக் கொள்ளலாம் என்று அனுமதி கொடுத்திருக்கிறது. விலை (யென் 4991 மில்லியன்) ரூ. 21 கோடி

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இந்த மாநில அரசு மூன்று கப்பல்களை வாங்குவதற்காக அமைச்சர் பேசியதாக இங்கே சொன்னார்கள். ஒரு கப்பல் வாங்க அனுமதித்த பிறகு இன்னும் இரண்டு கப்பல்களின் நிலைமை என்ன? அதற்கு எப்போது அனுமதி கிடைக்கும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது? வாங்க அனுமதித்துள்ள ஒரு கப்பலை எப்போது வாங்கப் போகிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒரு கப்பல் வாங்குவதற்குத்தான் மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது, இன்னும் இரண்டு கப்பல்கள் பற்றி என்ன நிலைமை என்று இப்போது நான் சொல்ல முடியாது. இந்த ஒரு கப்பல்கூட இப்போது விலை பேசி அதை கொடுக்கவேண்டும் என்று நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 1985-ம் ஆண்டு டிஸம்பருக்குள்ளாக அந்தக் கப்பலை அவர்கள் கட்டி நம்மிடம் ஒப்படைப்பதற்கு ஒப்புதலைத் தந்திருக்கிறார்கள்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, சில நிபந்தனைகளோடு ஜப்பானிலிருந்து அந்தக் கப்பலை வாங்குவதற்கு மத்திய அரசு அனுமதித்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவை என்னென்ன நிபந்தனைகள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, கப்பலின் தொழில் நுட்ப விவரங்கள் அடங்கிய அறிக்கை, கப்பல் கட்டுவதற்கான ஒப்பந்தம் இவைகளுக்கு டைரக்டர்—ஜெனரல் ஆப் ஷிப்பிங்—இவருடைய அனுமதி பெற வேண்டுமென்றும், 1984 கடைசிக்குள்ளாக இந்தக் கப்பலைப் பெற்றுவிடவேண்டுமென்றும் அதேபோன்று கப்பலின் விலையின் 80% அந்தக் கப்பல் தளமே நமக்குக் கடன் கொடுக்கிற காரணத்தால் வெளிநாட்டினுடைய வங்கிகள் அதற்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டுமென்பதை ஒத்துக்கொள்ளக்கூடாது, நம் நாட்டு வங்கிகள் தான் உத்தரவாதம் கொடுக்கமுடியும் என்ற கருத்தையும் சொன்னார்கள். இதைப்பற்றியெல்லாம் பேசி சம்பந்தப்பட்ட டைரக்டர்—ஜெனரல் ஆப் ஷிப்பிங்—இடம் பேசி அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, ஆறு நிபந்தனைகளோடு மத்திய அரசு அனுமதித்துள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆறு நிபந்தனைகள் சம்பந்தமாக தற்போது என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன? அடுத்து, எவ்வளவு கப்பல்கள் வாங்குவதற்கு எந்தெந்த நாடுகளில் டெண்டர் கேட்டிருந்தோம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த ஆறு குறிப்புகளையும் வைத்துக்கொண்டு நாம் பேசினோம். பேசிவிட்டு டைரக்டர்—ஜெனரல் ஆப் ஷிப்பிங்-இடம் சொல்கிற

1984 பிப்ரவரி 18]

போது அவர்கள் இந்த தொழில் நுட்பத்தைப் பொறுத்த வரையில் ஒப்புக்கொண்டார்கள். அதேபோன்று 1984-ம் ஆண்டு கடைசிக்குள்ளாக கப்பலை கட்டிக் கொடுக்க முடியாது என்று கப்பல்தளம் சொல்லிய காரணத்தால் 85 வரை அந்தக் காலத்தை நீட்டி வாங்கிக் கொள்ளலாம் என்ற அனுமதி தந்தார்கள். அந்த ஒப்பந்தத்திலும் அவர்களுக்கு திருப்தி ஏற்பட்டிருக்கிறது. 80 சதவீதத்துக்கு நம்நாட்டு வங்கிகள் உத்தரவாதம் கொடுத்தால் போதும் என்பதை கப்பல் தளம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. விலையைப் பொறுத்தவரையில், நாம் பேசி முடித்துக் கொண்ட விலையை மத்திய அரசாங்கத்தின் டைரக்டர்—ஜெனரல், ஷிப்பிங் ஏற்றுக்கொண்டுள்ளார். ஜப்பானிலிருந்து இதை வாங்க இருக்கிறோம். ஆனால் உலகத்தில் எங்கெங்கே கப்பல்தளங்கள் இருக்கின்றனவோ — எல்லா இடங்களிலும் நாம் டென்டர் கேட்டிருந்தோம். கடைசியாக மத்திய அரசாங்கத்திடமிருந்து சில டைரக்ஷன்ஸ் கொடுத்து ஜப்பானிலிருந்தும் கொரியாவி லிருந்தும் இதுபற்றி நீங்கள் கேட்கவேண்டுமென்று குறிப்பிட்டு சொன்னார்கள். அவர்களிடம் நாங்கள் விலை என்னவென்று கேட்டு — அத்தனை நாடுகளிலிருந்தும் வாங்கித்தான் — முடிவு எடுத்திருக்கிறோம். ஏற்கனவே ஒருமுறை இதுபற்றி விளக்கமாக நான் இந்த அவையில் சொல்லியிருக்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கல்கத்தாவிலேயிருந்து தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு வாடகைக் கப்பலில் நிலக்கரி வந்து கொண்டிருக்கிறது. புதியதாக கப்பல் வாங்குவதினால், அரசுக்கு எவ்வளவு தொகை லாபம் ஏற்படும்? எவ்வளவு டன் நிலக்கரி அதன்மூலம் கொண்டு வரப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாம் 8 வாடகைக் கப்பல்கள் மூலம் நிலக்கரியைக் கொண்டு வருகிறோம். ஏறத்தாழ 24 இலட்சம் டன் நிலக்கரி ஒரு ஆண்டுக்குத் தேவைப்படுகிறது. இப்போது ஒரு டன் நிலக்கரியை கப்பலில் எடுத்து வர செலவு ரூ. 160. நாம் இந்தக் கப்பலை வாங்கிப் பயன்படுத்தினால், டன் ஒன்றுக்கு ரூ. 100 தான் செலவாகும். டன் ஒன்றுக்கு ரூ. 60 மிச்சமாகும் என்று கணக்குப் போட்டால், மொத்தத்தில் ஏறத்தாழ ரூ. 14.40 கோடி ஒரு ஆண்டிற்கு நமக்கு அதன் மூலமாக செலவு மிச்சமாகும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால், இப்போது அனுமதிக்கப்பட்டுள்ள கப்பல் ஒன்றுதான். 24 இலட்சம் டன்கள் கொண்டு வரவேண்டுமென்றால், 3 கப்பல்கள் இருந்தால்தான் கொண்டு வர முடியும். அது மட்டுமல்ல. தூத்துக்குடியில் ஒரு மணி நேரத்தில் 2000 டன் நிலக்கரியை இறக்குவதற்கு கன்வேயர் பெல்ட் அமைத்திருக்கிறோம். ஆகவே, ஒரு கப்பல் இருந்தால் முழுமையாக நாம் அதைப் பயன்படுத்த முடியாது. எனவே இதிலே எவ்வளவோ சிக்கல்கள் இருக்கின்றன. இருந்தாலும், நமக்கு ஒரு கணிசமான தொகை

மிச்சமாகும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இன்னும் இரண்டு கப்பல்கள் அனுமதிக்கப்படுமானால், ஏறத்தாழ $14\frac{1}{2}$ கோடி ரூபாய் ஒரு ஆண்டிற்கு மிச்சமாகும் வாய்ப்பு இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு தேவையான கப்பல்கள் மூன்று. இப்போது மத்திய சர்க்கார் அனுமதி கொடுத்துள்ளது ஒரே ஒரு கப்பல்தான். 6 கப்பல்களில் வாடகை கொடுத்துக்கொண்டு, நிலக்கரி எடுத்துக் கொண்டு வருகிறோம். எனவே, குறைந்தது 10 கப்பல்கள் வேண்டுமென்று கேட்டால்தான், மத்திய அரசு நமக்கு 3 அல்லது 5 கப்பல்கள் கொடுப்பார்கள். எனவே, 10 கப்பல்கள் வேண்டு மென்று கேட்பதற்கு மத்திய அரசாங்கத்தோடு போராட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும் யோசனைப்படி நடந்தால், ஒரு கப்பல்கூட வாங்க அனுமதி கிடைக்காது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நாம் இப்போது ஜப்பானிலிருந்து கப்பலை வாங்குவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த கப்பல் வந்தபிறகு, அது சரியாக ஓடுமா, எத்தனை ஆண்டுகள் வரை பழுதில்லாமல் ஓடும் என்பதற்கான கியாரண்டி கொடுக்கப்பட்டிருக்கிறதா ? ஏற்கனவே வாங்கப்பட்ட கப்பல் சரியாக ஓடாததினால், அதனை நாம் நஷ்டத்திற்கு விற்றிருக்கிறோம். அந்த கியாரண்டியை வாங்குவதற்கு ஏதேனும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நாம் முதலிலே வாங்கியது பழையகப்பல் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். இப்போது அரசாங்கம் புதிய கப்பலை வாங்கயிருக்கிறது. அப்படி பழைய கப்பலை வாங்கிவிட்ட காரணத்தினால்தான், நஷ்டம் ஏற்பட்டது என்று அவர்கள் சொன்னதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். புதிய கப்பலை வாங்குகின்றபோது, நிச்சயமாக அதற்கு கியாரண்டி கொடுப்பார்கள். இப்போது எத்தனை ஆண்டுகள் கியாரண்டி என்பதற்கான குறிப்பு என்னிடத்தில் இல்லை. அதற்கான கியாரண்டி நிச்சயமாக உண்டு.

### சென்னை—மதுரை இடையே தூங்கும் வசதிகொண்ட சொகுசுப் பேருந்துப்பணி.

(70 * வினா எண். 19347)—திரு ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—